**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.51 of 2017**

**Prosecution Witness: PW9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மகாலிங்கம் | **Caste** | : |
| **Father's Name** | : பேச்சிமுத்து | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**<u>(A1 to A4 absent. For petition U/s.317 crpc filed and allowed.)</u>**

**Dated.21.03.2023.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் கீழ்மாரிமங்கலத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும், அ.சா.1 க்கும் 1ம் எதிரிக்கும் கடந்த 12.11.2014ம் தேதி திருமணம் நடைபெற்றது, 2 மாதம் கழித்து 1ம் எதிரியானவர் அ.சா.1 டம் வரதட்சணை கேட்டு அடித்து கொடுமைபடுத்தி வீட்டைவிட்டு அனுப்பிவிட்டார். அதன் பிறகு அ.சா.1 இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் எதிரிகளையும், அ.சா.1 யையும் அழைத்து பேசி சமாதானம் செய்து அ.சா.1 யை 1ம் எதிரியிடம் குடும்பம் நடத்துமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்கள். பின்பு 1 மாதம் கழித்து 1ம் எதிரி அ.சா.1 டம் 10 பவுன் நகையும், 50,000/- பணம் கேட்டு அ.சா.1 யை அடித்து அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார். இது சம்பந்தமாக நானும், அ.சா.1 ன் பெற்றோர்களும் மற்றும் சில நபர்களும் சேர்ந்து 1ம் எதிரி ஊரான குமுளூரில் அந்த ஊர்

முக்கியஸ்தர்களை வைத்து தேவாலயத்தில் பஞ்சாயத்து பேசினோம். 1ம் எதிரி அ.சா.1னுடன் சேர்ந்து வாழமுடியாது என்று மறுத்துவிட்டார். அ.சா.1, 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்வேன் என்று கூறினார். 1ம் எதிரியானவர் திருமணத்தின் போது அ.சா.1க்கு கொடுத்த 8 பவுன் நகையும், 1 லட்சம் மதிப்புள்ள பொருட்களை தரமறுத்துவிட்டார். அந்த ஊர் பஞ்சாயத்தில் அ.சா.1யை 1ம் எதிரியானவர் வாழ வைக்க முடியாது என்று சொன்னதால் நீங்கள் அந்த பெண்ணை அழைத்து செல்லுமாறு கூறிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) –</u>

நான் தற்போது சொல்லியுள்ளது போல் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் கீழ்மாரிமங்கலத்தில் அரசியல் கட்சியில் பொறுப்பில் உள்ளேன். அ.சா.1ன் தகப்பனார் தங்கராஜ் என்பவரை எனக்கு 20 வருடங்களாக தெரியும். 1ம் எதிரி அ.சா.1யை அடித்து கொடுமைப்படுத்தியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.1 சொல்லி தான் தெரியும். அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் போலிசார் விசாரணைக்கு நானும் சென்றேன். விசாரணைக்கு பின்னிட்டு 1ம் எதிரியும், அ.சா.1ம் சேர்ந்து குடும்பம் நடத்திய விவரம் எனக்கு தெரியாது. திரும்பவும் 1ம் எதிரிக்கும் அ.சா.1க்கும் எப்போது சண்டை நடந்தது என்றால் 1 மாதத்திற்கு பின்னிட்டு சண்டை நடந்தது. அ.சா.1ன் பெற்றோர் தான் பஞ்சாயத்திற்கு என்னை அழைத்து சென்றனர். எதிரிகள் தரப்பில் யார் யார் பஞ்சாயத்தில் கலந்து கொண்டனர் என்ற விவரத்தை குறிப்பிட்டு போலிசாரிடம் சொல்லவில்லை. பஞ்சாயத்து எப்போது நடந்தது என்றால் தேதி தெரியாது, காலை நேரத்தில் சென்றோம். குமுளூரில் உள்ள தேவாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தினோம், பேச்சு வார்த்தை நடத்திய ஊர் முக்கியஸ்தர்களின் பெயர் எனக்கு தெரியாது. 1ம் எதிரி அ.சா.1யை அடித்து கொடுமைபடுத்தி வரதட்சணை கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1ன் தகப்பனார் எனது நெருங்கிய நண்பர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்னது போல் பஞ்சாயத்து பேசியிருந்தால் பஞ்சாயத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், பஞ்சாயத்து பேசிய தேதி தெரிந்திருக்கும் என்றும், நான் சொன்னது போல் பஞ்சாயத்து பேசவில்லை என்பதால் தான் தேதி, பெயர் ஆகியவை தெரியவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2023.03.21 18:51:11 +0530

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.